1971 ஜூலை 29]

Nagapattinam-Thanjavur State Transport Express Buses

*542 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that the State Transport Express Buses between Nagapattinam and Thanjavur have been cancelled without prior notice with effect from 6th July 1971 ; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) இந்தப் பேருந்துகள் ரத்து செய்யப்படவில்லை. இந்த வழித்தடத்தில் பேருந்துப் பணியினைச் சிரமைத்ததன் விளைவாக அப்பேருந்துகளின் பயணத்தடவைகள் (trips) குறைக்கப்பட்டுள்ளன.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, 6—7—71 அன்று கோவையிலிருந்து நாகைக்குச் செல்லுகின்றவர்களுக்கும், நாகையிலிருந்து கோவைக்குச் செல்லுகின்றவர்களுக்கும், இந்த எக்ஸ்பிரஸ் பஸ்கள் நிறுத்தப்பட்டுவிட்டன என்று அறிவிக்கப்பட்டது என்றும் அதனால் பயணிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாயினர் என்றும், ஆனால் மறுபடியும் சென்ற வாரம்தான் அந்த பஸ் சர்வீஸ் தொடங்கியிருக்கிறது என்றும், இப்போது அந்த 618 ரூட்டில் இரண்டு ட்ரிப்கள்தான் போகின்றன என்றும் தெரிகிறது. எதற்காக இப்படிப் பஸ்கள் திடீரென்று நிறுத்தப்பட்டன. இப்போது எதற்காக மறுபடியும் அவைகள் விடப்படுகின்றன, இப்படி மீண்டும் விடப்பட்டும் முன்பிருந்த அளவிற்கு இல்லாமல் குறைந்த ட்ரிப்கள் ஏன் விடப்படுகின்றன என்ற காரணத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சேலம்—நாகைப்பட்டினத்திற்கு இடையிலே ஒரு பஸ் போய்க்கொண்டு இருந்தது. சேலம்—நாகைப்பட்டினத்திற்கு இடையே உள்ள தூரம் 171 மைல். இப்பேருந்து அங்கு சென்று திரும்புமானால் கிட்டத்தட்ட 342 மைல்கள் ஆகின்றன. எனவே மெய்ன்ட்டெனன்ஸ் சரிவரச் செய்ய முடியவில்லை. அதுபற்றிப் பயணிகளிடமிருந்து புகார்கள் வந்தன. சேலத்திலிருந்து நாகை வரை சென்று மீண்டும் திருச்சி வரையில் வரும்போது 223 மைல் ஆகிறது. ஒரு நாளைக்கு 250 மைல்களுக்கு மேல் ஒரு பஸ் போகக்கூடாது என்பது விதி. எனவே, சேலம்—நாகை பஸ்ஸை மறுபடியும் நாகையிலிருந்து கொண்டுவந்து திருச்சியில் நிறுத்தலாம் என்று அரசு உத்திரவிட்டதின்பேரிலே இந்த ரூட்டுக்கு அதிக பஸ்கள் தேவைப்பட்டன. இதன் காரணமாக கோவை—நாகைப்பட்டினம் இடையிலே சென்று கொண்டு இருந்த ஆறு பஸ்களில் இரண்டு பஸ்களை இதற்காகப் பயன்படுத்தினார்கள். ஆனால் மறுபடியும் அவைகள் அப்படியே விடப்படவேண்டும் என்று சொன்னதன் பேரிலே கோவை—நாகை வழித்தடங்களிலே பழையபடி விடும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட பஸ்கள் அனைத்தும் பொதுமக்களின் சௌகரியத்திற்காக விடப்படுகின்றன. ஆனாலும் இப்படித் திடீரென்று எந்த

விதமான முன்னறிவிப்பும் இல்லாமல் அவை புறப்படவேண்டிய நேரத்தில் "நிறுத்தப்பட்டுவிட்டன" என்று அறிவித்தால் பெரிதும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட அறிவிப்புகள் முன் கூட்டியே பொதுமக்களுக்குக் கிடைப்பதற்கான வகையில் விளம்பரம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவசியம் ஏற்படும்போது அந்த மாதிரி அறிவிப்புகள் கொடுக்கப்படுகின்றன.

High windows in State Transport Buses

* 543 Q.—DR. H. V. HANDE : will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal by the Government to provide buses on city routes with high windows, so that standing passengers could look out for their stops without crouching?

(b) if so, the date by which the above provision would be made ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) சென்னை மாநகரில் ஓடும் பயணிகள் அதிகமாக நின்று பயணம் செய்ய வசதியுள்ள பேருந்துகளில் பெரிய சாளரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இனி கட்டப்படும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் அனைத்திலும் பெரிய சாளரங்கள் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Is it the programme of the Government to steadily increase the number of buses for standees and reduce the number of buses where more people can sit? What is the position in the standee buses? More than half of the persons are made to stand. May I know from the Hon. Minister what exactly is the programme? How many standee buses are there? How many non-standee buses are there? May I know whether it is not a fact that people are finding it very difficult and inconvenient to stand in the bus and if so, what are the steps taken by the Government to mitigate their sufferings?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேள்வியானது சென்னை மாநகரில் ஓடும் பயணிகள் பேருந்துகளில் பெரிய சாளரங்கள் பொருத்தப்படுமா என்பதைப் பற்றியது. சென்னை மாநகரத்தில் ஓடும் பயணிப் பேருந்துகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலமுறை இம்மன்றத்தில் கேள்விகள் கேட்டு, அவற்றுக்குப் பதிலும் அளிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் இது பற்றி "அலெர்ஜிக்" ஆக இருக்கின்றார்களே தவிர பொது மக்களிடமிருந்து "பஸ்கள் சரியாக இல்லை" என்று எந்தவிதமான புகாரும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : I do not know what exactly the Hon. Minister means by allergy. We get information from the public. We get number of complaints. I would not waste my time in